# அறிவித்தல்

## அரங்கேற்றற்கலை பல்கலைக்கழகம்

### தகைமைக்கான பரீட்சை தொடர்பாக விண்ணப்பம் கோரல்

## பல்கலைக்கழக அனுமதி – 2019/ 2020 கல்வியாண்டு

### கட்புலக்கலை/ அரங்கேற்றல் கலையிலான (இசை/ நடனம்/ நாடகம் மற்றும் அரங்கேற்றல் கலை) விசேட இளமாணி பட்டதாரிப் பட்டபாடநெறி (2019 க.பொ.த. (உ.தரம்) பெறுபேறுகள் அடிப்படையிலானது)

2019/ 2020 கல்வியாண்டு தொடர்பாக அரங்கேற்றக் கலை பல்கலைக்கழகத்திற்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கு, 2019ஆம் வருடத்தில் நடைபெற்ற க.பொ.த. (உயர் தரம்) பரீட்சையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ள, பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் பல்கலைக்கழக அனுமதி தொடர்பாக தகைமைகளைப் பெற்றுக்கொண்டுள்ளதாக அறிவிப்புச் செய்யப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து தகைமைகளைப் பரீட்சிப்பதற்கு விண்ணப்பம் கோரப்படுகின்றது.

**01. அனுமதி தொடர்பாகத் தேவைப்படும் ஆகக் குறைந்த தகைமைகள்**

(i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள "இலங்கை பல்கலைக்கழக, முதலாம் பட்டதாரிப் பட்ட பாடநெறி தொடர்பாக அனுமதி, கல்வியாண்டு 2019/ 2020 (க.பொ.த. (உயர் தரம்) பரீட்சை 2019)" மாணவர் கைநூலில், 1ஆம் பகுதியில், 1.2 பிரிவின் கீழாகவுள்ள பல்கலைக்கழக பிரவேசம் தொடர்பாக பெற்றிருக்க வேண்டிய தகைமைகள் வழங்கப்பட்டுள்ளன.

**மற்றும்**

ஓவியம் மற்றும் சிற்பக் கலை/ இசை/ நாட்டியம்/ நாட்டியம் மற்றும் நடிப்புக் கலைகளைக் கற்க விரும்பும் பாடநெறியுடன் தொடர்புற்ற பாடங்கள், 2019 க.பொ.த. (உயர் தரம்) பரீட்சையில் ஆகக் குறைந்தது திறமைச் சித்திகள் (C) சகிதம் தோற்றிய பாடங்கள் மூன்றிலும் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(ii) பல்கலைக்கழக அனுமதி தொடர்பாகத் தேவைப்படும் மேற்படி ஆகக் குறைந்த தகைமைகளைக் கொண்டுள்ள மாணவர்கள் அதற்கு மேலதிகமாக அரங்கேற்றக்கலை பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றுக்கொள்வது தொடர்பாக பல்கலைக்கழகம் மூலம் நடாத்தப்படும் தகைமைப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

**02. விண்ணப்பிக்க வேண்டிய முறை:**

விண்ணப்பதாரர்கள், அரங்கேற்றற்கலை பல்கலைக்கழகத்தின் உத்தியோக பூர்வ இணையத்தளமான www.vpa.ac.lk இலுள்ள விண்ணப்பத்தை ஒன்லைன் (online) மூலம் பூரணப்படுத்தி சமர்ப்பிக்க வேண்டும். ஒன்லைன் (online) விண்ணப்பங்களைப் பூரணப்படுத்தி சமர்ப்பிப்பதற்கு மேலதிகமாக, பதிவிறக்கம் (Downloaded) செய்யப்பட்ட விண்ணப்பப் பத்திரத்தின் அச்சிடப்பட்ட பிரதியொன்றை கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களுடன் 2020.07.08 அல்லது அதற்கு முன்னர் கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில்" அரங்கேற்றற்கலை பல்கலைக்கழக அனுமதி - கல்வியாண்டு 2019/ 2020 "மற்றும்" விண்ணப்பிக்கும் பாடநெறி" குறிப்பிடப்படல் வேண்டும்.

**உதவி பதிவாளர்/ கல்வி மற்றும் மாணவர் சேவைகள்**
**அரங்கேற்றற்கலை பல்கலைக்கழகம்,**
**இல. 21, எல்பர்ட் கிறைசண்ட், கொழும்பு-07.**

தகைமைப் பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரர்களிடமிருந்து பாடநெறியொன்றிற்காக ரூ. 1,500/- கட்டணமொன்று அறவிடப்படும். அந்த தொகையானது அரங்கேற்றற்கலை பல்கலைக்கழகம் பெயரில் இலங்கை வங்கியின் சுதந்திரச் சதுக்கக் கிளையிலுள்ள இலக்கம் 84072227 என்ற கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டு செலுத்தப்படல் வேண்டும்.

க.பொ.த. (உ.தரம்) இரண்டு அழகியல் கலைப்பாடங்கள் தொடர்பாக தோற்றி அந்த இரண்டு பாடங்களுக்கான தகைமைப் பரீட்சைக்காக தோற்றுவதற்கு எதிர்பார்த்துள்ள விண்ணப்பதாரர்கள், வெவ்வேறாக அந்த பாடநெறிகளுக்கான செயன்முறைப்பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்துவதும் விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதும் கட்டாயமாகும்.

03. விண்ணப்பத்துடன் கீழே காணப்படும் ஆவணங்களை இணைத்தனுப்ப வேண்டும்.

விண்ணப்பப்பத்திரத்துடன் உங்கள் பெயர் மற்றும் முகவரி எழுதப்பட்ட, 9 X 4 அங்குல அளவிலான, ரூ. 70/- பெறுமதியையுடைய, முத்திரை ஒட்டப்பட்ட தபாலுறையொன்று, வங்கிக்கு பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் மூலப் பிரதி, தேசிய அடையாள அட்டையின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்று மற்றும் 2019 க.பொ.த உயர் தரப் பரீட்சை பெறுபேறு ஆவணத்தின் பிரதியொன்றையும் இணைத்தனுப்ப வேண்டும். உயர்தரப் பரீட்சை பெறுபேறு ஆவணம், பாடசாலை விண்ணப்பதாரரெனின் அதிபராலும், வெளிவாரி விண்ணப்பதாரரெனின் ஒரு விகாரையின் விகாராதிபதி அல்லது சமாதான நீதவான் மூலம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு இணைத்தனுப்பப்பட வேண்டும். வேறு எந்தவொரு ஆவணத்தையும் விண்ணப்பத்துடன் அனுப்புவது அவசியமற்றதுடன் பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் புகைப்படப்பிரதி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

04. பல்கலைக்கழக அனுமதிக்குத் தேவைப்படும் ஆகக் குறைந்த தகைமைகளைக் கொண்டிராத அல்லது பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் அல்லது உரிய தினத்தில் கிடைக்கப்பெறாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். அவ்வாறான சந்தர்ப்பங்களில், விண்ணப்பதாரர்களினால் செலுத்தப்பட்டுள்ள கட்டணம் மீளவும் செலுத்தப்படமாட்டாது.

05. அரங்கேற்றற்கலை பல்கலைக்கழக அனுமதி தொடர்பாகத் தேவைப்படும் தகைமைக்கான பரீட்சைக்குத் தோற்றும் அனைத்து மாணவர்களும் பல்கலைக்கழக அனுமதி தொடர்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு விண்ணப்பித்திருக்க வேண்டும்.

06. இந்த தகைமைக்கான பரீட்சை நடாத்தப்படும் தினங்கள், தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரர்களுக்கு கூடிய சீக்கிரம் தனிப்பட்ட முறையில் அறிவிக்கப்படுவதுடன், இந்த தகைமைக்கான பரீட்சை சிங்கள மொழியில் மாத்திரம் நடைபெறும்.

**பதிவாளர்,**
**அரங்கேற்றக்கலை பல்கலைக்கழகம்,**

**21, எல்பர்ட் கிறசண்ட்,**
**கொழும்பு-07.**
**தொ.பே - 011-2033710**
2020.06.18

© 2020 All Rights Reserved. Powered by *Summit (http://www.summitindia.com)*